**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 -ம் நாள் புதன்கிழமை

**O.S. No. 21/2025**

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW. 2 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லீமாரோஸ் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | ராயப்பன் | கிராமம் | : | வடமட்டம் |
| | | | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |
| | | | வயது | : | 35 |

**முதல் விசாரணை**

நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பியதன் பேரில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். நான் என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 2ம் பிரதிவாதி ராஜகுமாரி பெயரில் வழங்கப்பட்ட நத்தம் பட்டா என்றால் சரிதான். **அந்த பட்டாவானது பி.வா.சா. 6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**. மேலும் புல எண். 204/44 ராஜகுமாரியில் பெயரில் இருந்து வருகிறது. **புல எண். 204/44 ன் புல வரைபடம் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் 204/44 ன் அடங்கல் இரண்டாம் பிரதிவாதியான ராஜகுமாரியின் பெயரில் இருந்து வருகிறது. அந்த அடங்கலானது 'அ' பதிவேட்டிலிருந்து எடுக்கப்பட்ட ஆவணமாகும். **அந்த அடங்கலின் உண்மை நகல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் ஆவணமானது புல எண். 204 ன் மொத்த பரப்பளவை காட்டும் புல வரைபடமாகும். **அந்த புல வரைபடம் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புல எண் 204/44 எந்த புல எண்ணிலிருந்து உட்பிரிவு செய்யப்படுகிறது என்றால் 204/26 லிருந்து உட்பிரிவு செய்யப்பட்டு புல எண் 204/44 ஆக இருந்து வருகிறது. புல எண் 204/26 ல் உள்ள அடங்கல் 1ம் பிரதிவாதி பெயரில் இருந்து வருகிறது. மேற்படி ஆவணம் அ பதிவேட்டிலிருந்து எடுக்கப்பட்டு அதன் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்திலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை கொண்டுவந்துள்ளேனா என்றால் வந்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல குடவாசல் வட்டாட்சியரிடம் எழுத்துமூலம் கொண்ட அனுமதி பெற்று வந்துள்ளேனா என்றால் அழைப்பேசி மூலம் குடவாசல் வட்டாட்சியரிடம் தகவல் தெரிவித்து விட்டு சாட்சியம் சொல்ல வந்தேன். நான் தாக்கல் செய்த

அசல் ஆவணங்கள் அனைத்தும் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் சான்று நகலை வட்டாட்சியர் அலுவகத்தில் பெற்று கொள்ளலாம் என்றால் சரிதான். மேற்படி சான்று நகலை பெற வேண்டுமென்றால் மனு செய்து முத்திரைதாளுடன் பெற வேண்டுமென்றால் சரிதான். புல எண் 204/26 ஐ உட்டபிரிவுசெய்ததற்கு வட்டாட்சியர் அலுவகத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ. 10 ஆவணத்தில் உட்பிரிவுசெய்யப்பட்டதற்கான உத்தரவு பற்றிய விவரங்கள் உள்ளதா என்றால் இல்லை. அந்த உத்தரவு பற்றிய நில அளவையர்க்கு தான் தெரியும் என்றால் சரிதான். நான் மேற்படி ஆவணங்களின் உண்மை நகலை வழங்குவதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது என்றால் சரியல்ல. நான் எழுத்து பூர்வமான உத்தரவை வட்டாட்சியரிடம் பெறாமல் நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்வதால் நான் தனிப்பட்ட முறையில் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலருக்கு தனிப்பட்ட விதிமுறைகள் உள்ளதா என்றால் உள்ளது. வட்டாட்சியர் கொடுக்கும் உத்தரவை என்னால் கொடுக்க முடியுமா என்றால் முடியாது. புல வரைபடத்தின் உண்மை நகலை வழங்குவதற்கு எனக்கு தனிப்பட்ட விதிமுறைகள் உள்ளதா என்றால் உள்ளது. வட்டாட்சியர் வழங்க வேண்டிய உண்மை நகல்களை நான் தர இயலாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் ஏற்கக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.15 18:11:34 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.